
# திராவிடத்தால் வாழ்கிறோம்

860

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

13

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# கருப்புச்சட்டைக் கோட்டை கொரடாச்சேரி!

‘எல்லா சாலைகளும் ரோமாபுரியை நோக்கி’ என்பதுபோல, திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரியில் ‘எல்லா சாலைகளும் பெரியாரை நோக்கி’த்தான். இங்குள்ள கண்கொடுத்தவனிதம் கிராமம், இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான இணைப்புச் சங்கிலி. அந்த ஊரில், எந்தத் திசையில் சென்றாலும், தந்தை பெரியார் சிலையாக இருப்பார். மொத்தம் 7 சிலைகள் உள்ளன.

கருப்புச்சட்டை சகிதமாய் எவரேனும் இன்றும் தென்படுவர். அங்கு அந்தக் கருப்புச் சட்டைகள் உருவான காலகட்டம் 1950. நேரடியாகப் பெரியாரின் பேச்சைக் கேட்டோ, எழுத்தைப் படித்தோ கருப்புச்சட்டை அணிந்தவர்கள் அல்ல அவர்கள். ஆனால், தாங்கள் சந்தித்த அடக்குமுறைக்கு எதிரான ஆயுதமாகக் கருப்புச்சட்டையைக் கருதினர். அந்த ஆயுதத்தை அவர்கள் ஏந்த பாலமாக இருந்தது திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்.

கொரடாச்சேரி ஒன்றியத்தில் உள்ள கண்கொடுத்தவனிதம், பருத்தியூர், விடையபுரம், வடபாதி, தென்பாதி, கூத்தாநல்லூர் உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் கீழப்பண்ணை, மேலப்பண்ணை, நாயுடுப் பண்ணை என சில பண்ணைகள் வசம் இருந்தன. கம்யூனிஸ்ட் அமைப்புகள் அங்கு வேரூன்றி இருந்ததால், கூலி உயர்வுக்கான போராட்டங்கள், பேச்சுவார்த்தைகளுக்கு



கொரடாச்சேரி ஒன்றியத்தில் பெரியார் கொள்கைகள் நல்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பகுதிகளில் மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகள் உயர்ந்துள்ளன. சாதிய உணர்வு மேலோங்கவில்லை. இவற்றை நாம் ‘பெரியாரால் பிழைத்த கிராமங்கள்’ என்றும் சொல்லலாம். கருப்புச்சட்டைகளின் களச் செயல்பாடுகள் உருவாக்கிய மாற்றங்களை அங்கே பார்க்க முடியும்.



**-சுந்தரபுத்தன், பத்திரிகையாளர்.**

பஞ்சமில்லை. ஆனால், கூலி மட்டுமே அங்கு பிரச்சினையாக இல்லை. செருப்பு போடக்கூடாது, துண்டு போடக்கூடாது, மேல் சட்டை அணியக்கூடாது, படிக்கச் செல்லக்கூடாது என தீண்டாமைக் கொடுமைகளும் உச்சத்தில் இருந்தன.

தேநீர்க் குவளைகளில் கூட இருந்த பாகுபாடு அவர்களின் சுயமரியாதையைச் சீண்டிக்கொண்டிருந்த வேளையில்தான், ‘திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்’ டெல்டா மாவட்டங்களில் காட்டுத்தீ போல பரவிக் கொண்டிருந்தது. பண்ணை அடிமைத்தனத்தோடு சேர்த்து சாதியத்தின் இருப்பையும் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தது அந்த காட்டுத் தீ. அது, கொரடாச்சேரி விவசாயத் தொழிலாளர்களையும் ஈர்த்தது. ச.மாரிமுத்து, மாணிக்கம், கிட்டு, அய்யாசாமி, ஒளிச்செங்கோ என பத்துக்கும் மேற்பட்ட களப் போராளிகளை அப்பகுதிகளில் உருவாக்கியது. இவர்களின் செயல்பாடுகள் பண்ணையார்களுக்குப் பெரும் நெருக்கடியாக உருவானது. பண்ணையார்கள் பெரியாரை நோக்கி ஓடினர். பேச்சுவார்த்தையில் பண்ணையார்கள் பணிந்ததோடு மட்டுமின்றி, பெரியாரை வைத்து பயிற்சிப்பள்ளி நடத்த குடும்பமாய் ஒத்துழைக்கும் அளவுக்கு நிலைமை தலைகீழாய் மாறியது.

1970, 1980, 1990-களில் கொரடாச்சேரி திராவிடர் கழகத்தின் கோட்டையாக திகழ்ந்தது. வீட்டுக்கு ஒருவர் திராவிடர் கழக உறுப்பினராக இருந்தனர். பெரியார் பிறந்த நாள் அங்கு அறிவிக்கப்படாத உள்ளூர் விடுமுறை.

1990-களுக்கு முன்புவரை அங்கு ஊராட்சி மன்றத் தலைவர்கள் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களே. இன்றும் பருத்தியூர், விடையபுரம், கண்கொடுத்தவனிதம் திராவிடர் கழகக் கோட்டைகள்தான். இருபதுக்கும் மேற்பட்ட ஊர்களில் உயிர்ப்போடு இருக்கிறது திராவிடர் கழகம்.

**...பயணிப்போம்.**

## மருத்துவக் கல்வியைச் சிதைக்க புதிய எம்.பி.பி.எஸ்.!

புதுச்சேரியில் உள்ள ஜவஹர்லால் நேரு முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (ஜிப்மர்) விரைவில் ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ்.–பி.ஏ.எம்.எஸ். படிப்பைத் தொடங்கவுள்ளதாக ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் சமீபத்தில் கூறியுள்ளார். இதன்மூலம், அலோபதி மருத்துவம் மற்றும் ஆயுர்வேத மருத்துவம் இரண்டையும் ஒரே பாடத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்க, ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளமை, மருத்துவத் துறையினரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

ஒன்றிய அரசின் இந்த முடிவுக்கு இந்திய மருத்துவர் சங்கம் (ஐ.எம்.ஏ) கண்டனம் தெரிவித்துள்ளது. ஒன்றிய அரசு திட்டமிடும் ஒருங்கிணைந்த பாடத்திட்டம் அறிவியல்பூர்வமற்றது என்று ஐ.எம்.ஏ. விமர்சித்துள்ளது.

‘எம்.பி.பி.எஸ். படிப்பு நவீன மருத்துவத்தை மையமாகக் கொண்டது, அதே வேளையில், பி.ஏ.எம்.எஸ். படிப்பு ஆயுர்வேத மருத்துவத்தை மையமாகக் கொண்டது. இரண்டும் வெவ்வேறு மருந்து முறைகளைக் கொண்டவை. இந்த அறிவியல்பூர்வமற்ற கலவை, மருத்துவர்களுக்கோ அல்லது நோயாளிகளுக்கோ பயனளிக்காது’ என்றும் குறிப்பிட்டுள்ளது.

பல மேற்கத்திய நாடுகளில், மருத்துவ சேவைகளின் முதுகெலும்பாக இந்திய மருத்துவர்கள் இருக்கின்றனர். இந்த நிலையில், இரண்டு மருத்துவ முறைகளை இணைப்பதன் மூலம், தகுதிவாய்ந்த போலி மருத்துவர்களாக மட்டுமே இருக்கும் கலப்பின மருத்துவர்களை உருவாக்குவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் ஒன்றிய அரசினை இந்திய மருத்துவர் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

அறிவியல்பூர்வமற்ற, ஆய்வுகளை ஏற்காத ஒன்றிய அரசின் ஒற்றை அரசியல் மனப்பான்மை, இந்திய மருத்துவத் துறையிலும் தாக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

63

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''



# கழகத்தின் தீர்மானம் – பதறும் பா.ஜ.க!

**மதுரையில் நடந்த தி.மு.க. பொதுக்குழுவில், ஒன்றிய அரசு நிதி தரவில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு, “எந்த நிதியைத் தரவில்லை, தங்களுடைய தவற்றை மறைக்க, ஒன்றிய அரசு மீது குற்றம்சாட்டி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்” என்கிறாரே ஒன்றிய இணையமைச்சர் எல்.முருகன்?**

ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 2,152 கோடி ரூபாய் நிதியை, ஒன்றிய பா.ஜ.க. அரசு தரவில்லை என்பதும், தேசியக் கல்விக் கொள்கையின் அடிப்படையில், இந்தி மொழியுடனான மும்மொழிப் பாடத்திட்டத்தைக் கொண்ட பி.எம்.ஸ்ரீ. பள்ளிகளை, தமிழ்நாடு ஏற்கவில்லை என்பதால்தான், அந்த நிதியைத் தரவில்லை என்றும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாகவே ஊடகங்களிடம் தெரிவித்ததை தமிழ்நாடே பார்த்து, பா.ஜ.க.வின் மொழி ஆதிக்கத்தைக் காறித் துப்பியது.

இணையமைச்சர் எல்.முருகன் அப்போது எந்த உலகத்தில் இருந்தார் என்று தெரியவில்லை. அண்மையில், பிரதமர் தலைமையில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்திற்குச் சென்றபோது, மாநிலங்களுக்கான ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வு 50 சதவிகிதமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர். ஆனால், 15-வது நிதி ஆணையம் பரிந்துரைத்த 41 சதவிகிதத்தைக் கூட கொடுக்காமல் 33.16 சதவிகித நிதி மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதையும் பிரதமர் முன்னிலையிலேயே முதல்வர் போட்டுடைத்துவிட்டார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையானது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசின் பங்களிப்புத் தொகையை வழங்காமல், காலந்தாழ்த்துவதையும் தமிழ்நாட்டை பழிவாங்குவதையும் கண்டித்து, தி.மு.க.வும் விவசாயச் சங்கங்களும் போராடிய பிறகுதான், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தங்க நகைக்கடன் தொடர்பான ரிசர்வ் வங்கியின் நிபந்தனைகள் தொடர்பான போராட்டத்தை, தஞ்சையில் தி.மு.க.வும் காவிரி டெல்டா விவசாய அமைப்புகளும் ஒருங்கிணைந்து முன்னெடுத்தன. நிதி அமைச்சகத்துக்கு முதலமைச்சர் கடிதம் எழுதினார். அதன் பிறகே, நிபந்தனைகள் தளர்த்தப்படும் என அறிவிப்பு வெளியானது. ஆனால், அதன் நடைமுறைகளை காலதாமதமாக விவசாயிகளும் ஏழை மக்களும் தெரிவிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் 2023-இல் ஏற்பட்ட மழை-வெள்ளப் பாதிப்புகளால் சென்னை, திருவள்ளூர், தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளை, தேசியப் பேரிடராக அறிவித்து, மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளைக் கணக்கிட்டு ரூ.37,906 கோடி ரூபாய் நிவாரண நிதி கோரியது தமிழ்நாடு அரசு. ஒன்றிய பா.ஜ.க. அரசு தந்தது 900 கோடி. அதில் 500 கோடி என்பது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் ஒன்றிய அரசின் வழக்கமான நிவாரண நிதிதான். பேரிடரால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டின் குரலைக் கேட்க பிரதமரும் வரவில்லை. நிதியும் ஒதுக்கவில்லை. சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகள் உள்பட எல்லாவற்றிலும் தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது பா.ஜ.க. அரசு. அதைக் கண்டித்துதான் தி.மு.க பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

**...வினா தொடரும்.**

## ஃப்ளாஷ்பேக்



### மாற்றுத் திறனாளிகள் நாளில் வாழ்த்து!



எம்.இம்ரான் கான்

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3 அன்று, உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தலைவர் கலைஞர் அவர்களை பல்வேறு மாற்றுத் திறனாளிகள் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெறுவது வழக்கம். 2012–ஆம் ஆண்டில் அண்ணா அறிவாலயத்தில், எனது தந்தையும் ‘அட்சயா’ மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றச் சங்கத்தின் தலைவருமான எம்.முகமது காசிம் அவர்களுடன் நானும் சென்று தலைவர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றோம். தலைவர் ‘என்ன படிக்கிறாய்?’ என்று கேட்டார். நான் ‘டிப்ளமோ’ என்றேன் தலைவர் கலைஞர் அவர்களின் சிரிப்பு இன்னும் நினைவில் உள்ளது. உடன் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதியார் அவர்கள்.

**–எம்.இம்ரான் கான், பொன்னமராவதி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி, ஒருங்கிணைப்பாளர், புதுக்கோட்டை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### திரும்ப வந்த அபராதத் தொகை!

1948-ஆம் ஆண்டு ‘திராவிட நாடு’ இதழுக்கு அபராதம் விதிக்கப்பட்ட வழக்கு, 1949-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் விசாரணைக்கு வந்தது. தீர்ப்பில், மாகாண அரசு விதித்த ரூ.3,000 அபராதத் தொகை உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டது. ஜாமின் தொகை திரும்ப வந்தவுடன், அந்தத் தொகையை அனுப்பி வைத்த வாசகர்களுக்கே திருப்பி அனுப்பி வைத்தார் அண்ணா.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.